**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**

**அ.வ எண் 26/2018**

| | |
|---|---|
| பெயர் | .. சண்முகையாத்தேவர்(பி.சா.1) |
| த/பெ. க/பெ | .. |
| கிராமம் | .. |
| தாலுகா | .. |
| தொழில் | .. |
| வயது | .. |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ம் நாள் இந்நீதிமன்ற உதவியாளர் அருணா ரூபாவதி அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

எனது பெயர் சண்முகையாத்தேவர். நான் மேற்படி முகவரியில் குடியிருக்கிறேன். நான் இந்த வழக்கில் பிரதிவாதி. நான் எனது தரப்பு முதல்விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விசயங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். எனது தரப்பில் 5 ஆவணங்கள் தாக்கல் செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்கள் **பி.சா.ஆ. 1** முதல் **பி.சா.ஆ.5** ஆக குறியீடுசெய்யப்படுகிறது **(பி.சா.ஆ.2 ஆவணத்துடன் ஒப்புதல் வரைபடம் இல்லாததால் இந்த ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்று கூறிய வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)**. நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கினை தள்ளுபடி செய்திட பிரார்த்திக்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை:</u>** வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி